**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No. 299 of 2020**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | **PW1** |
| **Name of the Witness** | : | சுப்ரமணியன் |
| **Father's Name** | : | பரமானந்தம் |
| **Age** | : | 66 |
| **Occupation** | : | |
| **Address** | : | வெள்ளாளர் தெரு, குறிஞ்சிப்பாடி தாலுக்கா |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 25th day of March, 2024.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

1. வேலைக்காக கொடுத்த பணத்தை வேலை வாங்கி தராததால் திரும்பகேட்டு, வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 18.12.2014 முதல் 11.02.2015 வரை ஆகிய தேதிகளுக்குள் 21 லட்சம் பணம் என்னிடம், வாங்கியுள்ளார்கள். அவ்வாறு என்னிடம் பணம் வாங்கியதற்கு அவர்களிடம் நான் எந்த ஆவணங்களிலும் எழுதி வாங்கிக்கொள்ளவில்லை என்றால் சரி. உறவினர் என்பதால் எழுதி வாங்கிக்கொள்ளவில்லை. உறவினர்கள் என்பதால், வேறு நபர்கள் யாரையும் வைத்துக்கொண்டு, நான் பணம் கொடுக்கவில்லை. என் குடும்ப உறுப்பினர்களை வைத்துக்கொண்டு பணம் கொடுத்தேன். என்ன வேலைக்காக பணம் வாங்கினார்கள் என்றால், என்ன வேலை என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு வேலை கொடுப்பதற்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் இல்லை. சொந்தக்காரர்கள் என்பதால் நம்பிக்கையின் அடிப்படையில் பணம் கொடுத்தேன் என்றால் சரி. இவர்கள் வேலை வாங்கி கொடுக்கமாட்டார்கள் என்று எந்த வருடம், எந்த மாதம் தெரிய வந்தது என்றால், அது எனக்கு தெரியாது. நாங்கள் ஒருவருடமாகவே பணத்தை வாங்க முயற்சி செய்தோம். முதன்முதலில் புகாரை எந்த வருடம் கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. குறிஞ்சிப்பாடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். காவல்துறை துணை

தலைவரிடமும் ரிப்போர்ட் செய்துள்ளோம். 16.11.2017 தேதியில், வாதசாஆ 5 ன் மூலம் குறிஞ்சிப்பாடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரி. அந்த புகார் சிஎஸ்ஆர் நெம்பர் 108/2017 ஆக காவல்நிலையத்தில் எண்ணிடப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த புகாரில், வேலை வாங்கி தருவதாக 35 லட்சம் பணமும் 50 சவரன் நகையும், பெற்றுக்கொண்டு, வேலை வாங்கி தராமலும், பணத்தை திருப்பி தராமலும், ஏமாற்றியதாக சொல்லி புகார் கொடுத்தேன் என்றால், அவ்வாறு நான் புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு புகாரில் எழுதப்பட்டிருந்தால் அது தவறா என்றால் தவறு.

2. மூர்த்தி மகன் முருகன், என் மகனின் சகலை ஆவார். நான் கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த கடனுறுதிச்சீட்டு பஞ்சாயத்தார் முன்னிலையில், 15.11.2018 ஆம் தேதியில் எழுதப்பட்டது என்றால் சரி. அந்த பஞ்சாயத்து கானஞ்சாவடி பஞ்சாயத்து ஆகும். அந்த பஞ்சாயத்தில், ஊர் பொதுமக்களும், எனது தரப்பினர்களும் கலந்துகொண்டார்கள். சுமார் பத்து, பதினைந்து நபர்கள் கலந்துகொண்டார்கள். அந்த பதினைந்து நபர்களிடமும் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை, மூன்று நபர்களிடமோ அல்லது நான்கு நபர்களிடமோ கையெழுத்து வாங்கினார்கள். சாட்சிகள் யார் கையெழுத்திட்டார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த பஞ்சாயத்து சாட்சிகளை நீதிமன்றத்தில் விசாரிக்கப்போகிறேனா என்றால் இல்லை. அந்த பஞ்சாயத்தின்போது தான் புரோநோட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரி. புரோநோட்டில் யார் யார் சாட்சி கையெழுத்திட்டார்கள் என்றால், கையெழுத்திட்ட நபர்களை அடையாளம் தெரியும். அவர்களின் பெயர் தெரியாது. சாட்சி மீண்டும் சொல்கிறார், எனக்கு வேண்டியவர்கள் கையெழுத்து போட்டார்கள். புரோநோட்டை எழுதியது சிவனேசன். சாட்சி கையெழுத்திட்டவர் சேப்ளாநத்தத்தை சேர்ந்தவர், அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. பிராம்சரி நோட்டில் மூர்த்தி கையெழுத்து போட்டார்.

பிராம்சரிநோட்டில் 2ம் பிரதிவாதி முருகன் கையெழுத்து போடவில்லை, நானும் கையெழுத்து போடவில்லை. பணம் , மூர்த்தி, முருகன் ஆகிய இருவரிடமும் கொடுத்தேன். இந்த கடனுறுதிச்சீட்டு, குறிஞ்சிப்பாடி காவல்நிலையத்தில் வைத்து எழுதி வாங்கப்பட்டது என்றால் அது தவறு. குறிஞ்சிப்பாடி காவல்நிலையத்தில் வைத்து எனக்கு ஆறுலட்சம் பணம், பிரதிவாதிகள் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை, கொடுக்கவில்லை. பல தேதிகளில், மொத்தமாக ரூபாய் 12,90,000/- கொடுத்துவிட்டார் என்றால், சரியல்ல. எனது வங்கி கணக்கில் ரூ. 1,31,000/- தான் செலுத்தியுள்ளார். நான் உறவினர் என்பதால், பிரதிவாதி என்னை அழைத்து சென்று, சென்னையை சேர்ந்த ஜெயராஜ் மற்றும் ராமசாமியிடம் தான் பணத்தை கொடுத்தோம் என்றால் சரியல்ல, நான் அவர்களை பார்த்தது இல்லை. பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் என்னிடம் ரூ.3,71,000/- பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றால் இல்லை, என்னிடம் பணம் கொடுக்கவில்லை. எனது வங்கி கணக்கில் ரூ.3,19,000/- பல தேதிகளில் பிரதிவாதி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் ரூ. 1,31,000/- ஐ தவிர வேறு எந்த பணமும் கொடுக்கவில்லை. பிரதிவாதிகளிடம் ரூ.21,00,000/- கொடுத்ததாக சொல்கிறேனா என்றால் ஆம். அவ்வாறிருக்க ரூ.16,00,000/- லட்சம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்ய காரணம் என்ன என்றால், என்னிடம் பிரதிவாதி சிறுக சிறுக சுமார் ரூபாய் ஐந்து லட்சம் வரை திரும்ப செலுத்தியுள்ளார். அதனால் தான் ரூ.16,00,000/- லட்சத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வாதசாஆ 8 பஞ்சாயத்து உடன்படிக்கையில், பிரதிவாதியிடம் ரூ.21,00,000 பணம் கொடுத்தேன் அதில் சிறுக சிறுக ரூபாய்5,00,000/- பணம் கொடுத்துவிட்டார்,. பாக்கி ரூ.16,00,000/- தரவேண்டும் என கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எழுதப்படவில்லை. அந்த உடன்படிக்கையில் வேலை வாங்கி தருவதற்காக ரூ.21,00,000/- பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதசாஆ 9 பிராம்சரி நோட்டில், வேலை வாங்கி தருவதற்காக ரூ.21,00,000/-

பிரதிவாதி பெற்றுக்கொண்டதாகவும் ரூ.5,00,000- கொடுத்தது போக, பாக்கி ரூ.16,00,000/- தரவேண்டியுள்ளது என்று கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த பிராம்சரி நோட்டில் நான் அவருக்கு கடன் கொடுத்தது போல் வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. எதற்காக அந்த பணம் கொடுக்கப்பட்டது என்பது அந்த பிராம்சரி நோட்டில் எழுதப்படவில்லை என்றால் சரி. உண்மையில் வேலை வாங்கி தருவதாகத்தான் பிரதிவாதி என்னிடம்பணம் வாங்கினார் என்றால் சரி. இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். காவல்துறையினர் அவர்மீது எந்த நடவடிக்கையாவது எடுத்தார்களா என்றால் அழைத்து விசாரித்தார்கள், வேறு நடவடிக்கை எடுக்கவில்லை. புகாரின் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், அவர்மீது நீதிமன்றத்தில் தனிபுகார் எதுவும் நடவடிக்கை எடுக்கக்கோரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் மீது குற்றவழக்கு பதிவு செய்யப்படவேண்டுமென்று எந்த உத்திரவும் நான் வாங்கவில்லை என்றால் சரி. வாதசாஆ 3, முருகன் கொடுத்த ஆறரை லட்சத்திற்கான காசோலை ஆகும். அந்த காசோலையின் பேரில் எந்த குற்றநடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரி. நான் வாதியிடம் கொடுத்தது சட்டப்படி திரும்ப பெறக்கூடிய கடனுக்காக அந்த தொகை கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு தொகை கொடுக்க கடமை இல்லாத போதிலும், ரூ.12,90,000/- எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ஜெயராஜ் மற்றும் ராமசாமியை எனக்கு யாரென்றே தெரியாது. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-N.Prabakar*
*I Additional District Judge*
*Cuddalore.*